


**19. 06. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. கனடா சைப்ரஸ் குரோஷிய நாடுகளில் 5 நாள் அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு.நரேந்திரமோடி தற்போது தாயகம் திரும்புகிறார்.

2. டெல்லி IIT உட்பட நாட்டின் 54 கல்வி நிறுவனங்கள் QS உலக பல்கலைகழக தர வரிசை பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

3. ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகளால் பழங்குடியின மாணாக்கர் பயனடைந்து வருவதாக மத்திய அமைச்சர் திரு.ஜூவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

4. தமிழகம் தொழில்துறையில் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. சென்னையில் நடைபெறும் மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி மகளிர் பிரிவில் தமிழகம் இன்று ஹரியானாவை எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி கனடா சைப்ரஸ் குரோஷிய நாடுகளில் 5 நாள் அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு தற்போது தாயகம் திரும்புகிறார்.

தமது பயணத்தின் இறுதிகட்டமாக குரோஷியாவில் அந்நாட்டு பிரதமர் ஆன்ரே பிலன்கோவிச்-உடன் இருதரப்பு வர்த்தகம் விநியோக சங்கிலியை வலுப்படுத்துவது உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

மருந்தியல், வேளாண்மை, தகவல் தொழில்நுட்பம் மின்னணு தொழில்நுட்பம் புத்தாக்க எரிசக்தி செமிகண்டக்டர் பிரிவுகளிலும் நட்புறவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் இடம்பெற்றன.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்தில் இந்தியாவிற்கு ஆதரவு தெரிவித்தமைக்காக அந்நாட்டு தலைமைக்கு நன்றி தெரிவித்த பிரதமர் மனித சமூகத்தின் எதிரியாக தீவிரவாதம் திகழ்கிறது என்று எடுத்துரைத்தார்.

இந்திய ஐரோப்பிய அரசியல் நட்புறவையும் ஒத்துழைப்பையும் முன்னெடுத்துச்சென்று இருநாட்டு உறவுகளுக்கு ஒரு உந்துசக்தியாக பிரதமரின் குரோஷிய பயணம் அமைந்துள்ளது.

**********

**தர்மேந்திர பிரதான்**

டெல்லி இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் உட்பட 54 இந்திய கல்வி நிறுவனங்கள் QS உலக பல்கலைகழக தர வரிசை பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இதன்படி ஐஐடி டெல்லி இதுவரை வகித்துவந்த 150 ஆவது இடத்திலிருந்து 123ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதுகுறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ள மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கல்வி சீர் திருத்தங்களே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கல்வி கொள்கை 2020 இந்தியாவின் கல்வி தரத்தை மாற்றியிருப்பதோடு கல்வி புரட்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

ஜி-20 நாடுகளில் வேகமாக வளர்ந்து வரும் கல்வி நாடாகவும், இந்தியா திகழ்கிறது என்று அவர் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் சீனாவிற்கு அடுத்த படியாக கல்வி பட்டியலில் இந்தியா 4ஆது இடத்தை வகிப்பதாகவும் திரு.தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

**********

**ஈரான்**

போர் பதற்றம் சூழ்ந்துள்ள ஈரானிலிருந்து இந்தியர்களை பாதுகாப்பாக தாயகம் கொண்டுவருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மேலும் பல இந்தியர்கள் விமானம் மூலம் இன்று நாடு திரும்புகின்றனர்.

ஏற்கனவே வடக்கு ஈரான் பகுதியிலிருந்த 110 இந்திய மாணவர்கள் டெல்லி அழைத்து வரப்பட்டனர்.

ஈரானில் வசிக்கும் 350 இந்தியர்களிடமிருந்து தங்களை தாயகம் அழைத்து செல்வதற்கான கோரிக்கைகள் பெறப்பட்டிருப்பதாக மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் கிர்த்தி வர்த்தன்சிங் தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சக தலைமை இயக்குனரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மத்திய பாதுகாப்பு செயலர் திரு.ராஜேஷ் குமார் சிங் பேசியுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேல் ஈரான் நாடுகளுக்கிடையிலான சண்டை மேலும் வலுவடைந்து வருகிறது.

**********

**ஜுவல் ஓரம்**

பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை கொண்டு வர அரசு முனைப்புடன் செயலாற்றி வருவதாக மத்திய பழங்குடியின விவகாரத்துறை அமைச்சர் திரு.ஜுவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக எண்ணற்ற திட்டங்களை செயலாற்றி வரும் அமைச்சகம் பழங்குடியினர் பின்தங்கிவிடாதபடி பல்வேறு முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

அதில் ஒன்று ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகள் என்று கூறிய அவர் இதன்மூலம் பழங்குடியின மாணாக்கர் பெருமளவு பயனடைந்து வருவதாக எடுத்துரைத்தார்.

மத்திய அமைச்சர் இதுதொடர்பாக ஆகாஷ்வாணிக்கு அளித்த நேர்முகம் இன்றிரவு ஒன்பதரை மணிக்கு அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகிறது.

**********

யோகா

11 ஆவது சர்வதேச யோகா தினம் நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ள நிலையில் நாடுமுழுவதும் யோகா சார்ந்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இயற்கையோடு ஒன்றி வாழ்வதன் அவசியத்தை திருச்சியை சேர்ந்த யோகா பயிற்சியாளர் திருமதி துர்கா தேவி எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்:

**வாய்ஸ்**

**********

**இடைத்தேர்தல்**

கேரளா குஜராத் மேற்குவங்கம் பஞ்சாப் ஆகிய 4 மாநிலங்களில் 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

இத்தொகுதிகளில் சராசரியாக பகல் 1 **மணி நிலவரப்படி** 35 சதவிகித வாக்குகள் பதிவாயின.

வாக்குகள் வரும் 23ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

**********

முதலமைச்சர்

தமிழகத்தில் தொழில்துறை மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் 16ஆவது சர்வதேச இயந்திர கருவிகள் கண்காட்சியை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் அதிக அளவில் செயல்படுவதாக கூறினார்.

தமிழகத்தில் மேற்கொள்ளும் முதலீடுகளில் உலக நாடுகள் நம்பிக்கை வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சிறு குறு தொழில் முதலீட்டாளர்கள் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு 9.31 சதவிகிதம் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஜவுளி மற்றும் மென்பொருள் உற்பத்தியில் தமிழகம் 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

இக்கண்காட்சியில் லேசர் தொழில்நுட்பம் ரோபோடிக்ஸ் செயற்கை நுண்ணறிவு கருவிகள் இடம்பெற்றுள்ளன.

**********

முதலமைச்சர் நிவாரணம்

தூத்துக்குடி முறப்பநாடு தாமிரபரணி ஆற்றுப்பால மீட்பு பணியின்போது உயிரிழந்த காவலரின் குடும்பத்தினருக்கு 30 லட்ச ரூபாய் நிவாரண நிதியையும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

**********

உதயநிதி

ஜூனியர் உலக கோப்பை ஹாக்கி தொடர் போட்டிகளுக்கான லட்சினையை துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் இன்று சென்னையில் வெளியிட்டார்.

சென்னையிலும், மதுரையிலும் வரும் நவம்பர் டிசம்பர் மாதங்களில் இப்போட்டிகள் நடைபெற உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**********

**கே.என்.நேரு**

திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் புதிய விரிவான சிற்றுந்து திட்டத்தின் கீழ் சிற்றுந்து சேவைகளை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு இன்று துவக்கிவைத்தார்.

இதன்படி முத்தரசநல்லூர், சமயபுரம், பளூர், கம்பரசம்பேட்டை, புள்ளம்பாடி, துறையூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு 20 சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன.

மணப்பாறை பேருந்து நிலையத்தில் இருந்து அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழியும் சிற்றுந்து சேவையை இன்று துவக்கிவைத்தார்.

**********

**ராதாகிருஷ்ணன்**

தமிழ்நாடு மின்வாரியத்தில் காலிப்பணியிடங்களை விரைவில் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக மாநில மின்வாரிய தலைவரும் மேலாண்மை இயக்குனருமான திரு.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் அரசு பல்நோக்கு உயர்சிகிச்சை மருத்துவமனையின் மின் கட்டமைப்புகளை இன்று ஆய்வு செய்த அவர் மின்துறை வருவாய் 70 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்று கூறினார்.

நிலுவையில் உள்ள ஒப்பந்தங்களை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

தமிழக மின்வாரியத்தில் ஆண்டொன்றுக்கு 800 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் குறைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

மின்துறை தற்போது ஒழுங்குமுறை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால் கொள்கை முடிவுகள் அதனை சார்ந்தே அமையும் என்றார்.

வேலூர் மண்டலத்தில் 3 துணை மின் நிலையங்கள் இந்தாண்டு அமைக்கப்படும் என்று கூறினார்.

தமிழகத்தில் 14 ஆயிரத்து 800 மெகா வாட் மின் உற்பத்தி திறன் உள்ளதாக கூறிய அவர் உடன்குடியில் ஆயிரத்து 320 மெகா வாட் அனல்மின் பிரிவு அடுத்த 4 மாதங்களில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

அதனை தொடர்ந்து 100 துணைமின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திட்டமிடல் காரணமாக மின் உற்பத்தியில் எந்த பற்றாக்குறையும் இல்லை என்று தெரிவித்தார்.

காற்றாலை, புனல், சூரியசக்தி மூலம் மின்உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு.ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

**********

**மதிவேந்தன்**

தமிழகத்தில் பள்ளி கல்லூரி மாணாக்கரின் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு முன்னெடுப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில ஆதி திராவிடர் பழங்குடியின நலத்துறை அமைச்சர் திரு.மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் ரயில் நிலையத்தில் கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற ஹேக்கத்தான் போட்டியை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் இதில் பங்கேற்கும் மாணாக்கர் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகளை வழங்கி வருவதாக கூறினார்.

மாணவ மாணவிகளின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்காக தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மாநில அரசு உரிய ஒத்துழைப்பை அளிப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

**********

இருவரி

**தமிழகத்தில் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல்** கலந்தாய்விற்கு இன்று தொடங்கி வரும் 25ஆம் தேதிவரை தகவல் மேலாண்மை முகமை இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என பள்ளிகல்வித்துறை தெரிவித்துள்ளது.

**தமிழ்நாட்டில் 12ஆம் வகுப்பு துணைதேர்வுக்கான** தேர்வு கூட அனுமதி சீட்டை மாணாக்கர் dge.tn.gov.in என்ற இணையதளத்தில் இன்றுமுதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்** நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

**சிவகங்கை மாவட்டம் தாயமங்கலம் ஊராட்சி** பகுதியில் சிறுதானிய பொருட்களின் மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தி பொருட்களை ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் இன்று பார்வையிட்டார்.

**விழுப்புரம் மாவட்டம் அவலூர் பேட்டையில் வாழ்ந்து** காட்டுவோம் மகளிர் திட்டத்தின் கீழ் தொழிற்கடன் விழிப்புணர்வு முகாம் நாளை நடைபெற உள்ளது.

**திருப்பூரில் போலி ஆதார் அட்டை உள்ளிட்ட** ஆவணங்களின் கீழ் தங்கியிருந்த 26 வங்க தேச தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**********

திருப்பூர் - நெல்லை

**நொய்யல் ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால்** திருப்பூர் ஆண்டிப்பாளையம் தரைப்பாலம் மூழ்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**நெல்லை மாவட்டத்தில் மழை குறைந்ததால்** மணிமுத்தாறு பாபநாசம் அகஸ்தியர் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆறாயிரத்து 829 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக 12 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 113.81 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆறாயிரத்து 500 கன அடியாக உள்ளது.

**********

ஹாக்கி

சென்னையில் நடைபெறும் மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி ஆடவர் பிரிவில் இன்று

மகராஷ்டிரா – மணிப்பூரையும்,

ஒடிசா – புதுச்சேரியையும் எதிர்கொள்கின்றன.

மகளிர் பிரிவில் தமிழகம் - ஹரியானாவுடனும்,

ஒடிசா - பஞ்சாபுடனும் மோதுகின்றன.

**********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்சில் நாளை தொடங்குகிறது.

இரு அணிகளுக்கிடையே 5 டெஸ்ட் போட்டிகள் நடைபெற உள்ளன.

சுப்மன் கில் தலைமையில் இந்திய அணி இதில் களமிறங்குகிறது.

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**